## சுருக்கம்

பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் – வேளாண்மை பொறியியல் துறையிலிருந்து அயற்பணியில் பொறியாளர்களை பணியிலமர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை

**அரசாணை (ப) எண். 16** **நாள்:9.1.2008**

**படிக்கப்பட்டது**

1. அரசாணை (2ப) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.6.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 கடித ந.க.எண்.12550/2006/மாநஅ4 நாள் 7.1.2008.

---

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்திற்காக மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு கீழ்க்காணும் பொறியாளர் பணியிடங்கள் இரண்டாண்டுகளுக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

| வ. எண். | பதவியின் பெயர் | தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மதுரை மாநகராட்சி | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 |
| 2. | செயற்பொறியாளர் | 2 | 2 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 4 | 4 |
| 4. | உதவிப்பொறியாளர்/இளநிலை பொறியாளர் | 8 | 8 |
| 5. | வரைவு அலுவலர் | 4 | 4 |
| 6. | தொழில்நுட்ப உதவியாளர் | 16 | 16 |

2. தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணி விதிகள், 1996–ல் விதி 6–ன் படி, இவ்விதிகளிலுள்ள பணியிடங்களுக்கு பதவியுயர்வு தெரிவு முறைப்படி மேற்கொள்ள வேண்டும். இப்பணியிடங்களுக்கு மாநகராட்சியில் தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாத நிலையில் மட்டுமே அயற்பணியில் பணியிலமர்த்தப்பட வேண்டும். மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் தகுதி வாய்ந்த பொறியாளர்கள் இல்லாத பணியிடங்களை அயற்பணி அடிப்படையில் பூர்த்தி செய்யுமாறு அம்மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் ஏற்கனவே கேட்டுள்ளனர்.

3. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட எட்டு உதவி/இளநிலைப்பொறியாளர் பணியிடங்களில், ஐந்து பணியிடங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள மூன்று பணியிடங்களில் அயற்பணியில் பணிபுரிய வேளாண்மை பொறியியல் துறையிலுள்ள மூன்று பணியாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும், இவர்களது விருப்பத்தினை அத்துறையின் தலைமைப்பொறியாளர் அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். இதற்கேற்ப, கீழ்க்காணும் பணி மாறுதல்களை அயற்பணி அடிப்படையில் தற்சமயத்திற்கு மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்:

| வ. எண் | பொறியாளரின் பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் இடம். | அயற்பணி அடிப்படையில் பணியிலமர்த்தப்பட வேண்டிய பணியிடம் மற்றும் மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | திரு என். சந்திரசேகரன், உதவிப்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை | அரியலூர் | உதவிப்பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 2. | திரு பி. ராதாகிருஷ்ணன், இளநிலை பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை | உதகமண்டலம் | இளநிலை பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 3. | திரு ஆர். ரமேஷ்குமார், இளநிலை பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை | ஆத்தூர் | இளநிலை பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி |

4. ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்திற்காக வேளாண்மை பொறியியல் துறையிலிருந்து மூன்று உதவி/இளநிலைப்பொறியாளர்களை அயற்பணியில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியிலமர்த்தக்கோரும் மேலே பத்தி மூன்றில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே.தீனபந்து
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை—5.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, குறளகம், சென்னை—108
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநி) துறை, சென்னை—9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
10/1/08